**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.30/2026**

ம.சா.1 மனோகரன் த /பெ தம்பியப்பன் நாள் : 23.07.2026

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் புதுப்பேட்டையில் இருந்து திருப்பத்தூர் நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். எனக்கு 100 மீட்டருக்கு முன்னால் ராஜகோபால் சென்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரே வந்த பஜாஜ் இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. சாலையின் மத்திய பகுதியில் தான் விபத்து ஏற்பட்டது. தலையில் அடிப்பட்டது தான் இறந்தார். அவர் ஓட்டி வந்த வாகனம் புல்லட் இருசக்கர வாகனத்தில் வந்தார். தலைக்கவசம் அணியாததால் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றும், தலைக்கவசம் அணிந்திருந்தால் தவிர்த்து இருக்கலாம் என்றால் சரிதான். புல்லட் வாகனம் இடது ஒரமாக சென்று என்று தவறாக சாட்சியம் மனுதாரர் கேட்டு கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.